# மூவர் தமிழும் சைவ நெறியும்


பதிப்பாசிரியர்கள்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2014

நூலின் பெயர் :

மூவர் தமிழும் சைவ நெறியும்

பதிப்பாசிரியர்கள் :

க. இரகுபரன்

கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2014

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,

இலங்கை.

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளூமென்டால் வீதி, கொழும்பு – 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : xxiv + 644

பிரதிகள் : 750

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 800 /=

Title:

'Moovar Thamilum Saiva Neriyum'

Editors:

K. Raguparan

Dr. S. Pirasanthan

First Edition : 2014

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka.

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No of Pages : xxiv + 644

No of Copies : 750

Size : 1/ 8

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 800 /=

ISBN 978-955-9233-33-6

# தேவாரங்களூடு புலப்படும் சைவப்பிரிவுகள்

தி. செல்வமனோகரன்

தமிழக மக்கள் சமண பௌத்த துறவிகளின் அறம், பெண்கள் குறித்த பார்வை, துறவிற்கு முதன்மை போன்ற பல்வேறு காரணங்களால் விரக்தியின் விளிம்பில் நின்ற காலகட்டத்தில் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று நம்பிக்கையூட்டி பெண்ணில் நல்லாளோடு பெருந்தகையாகச் 'சிவன்' இருத்தலைக் காட்டி இல்லறம் என்பது நல்லறம் என எடுத்துரைத்து பற்றுக்கோடு இழந்திருந்தவர்களுக்கு இறைவனையே இம்மைக்கும் மறுமைக்குமான பற்றுக்கோடாக்கிய பெருமை தேவார முதலிகளுக்கு உண்டு. சைவ வரலாற்றில் நிறுவன மயப்படுத்தப்பட்ட முதல் இயக்கமாக தேவார முதலிகளின் பக்தி இயக்கம் அமைந்தது. பக்தி இயக்கம் என்பது இச்சமண பௌத்த மதங்களுக்கு எதிராய்ப் பிறந்த ஒரு கலக இயக்கமே[1].

துறவிகளான பௌத்தரும், திகம்பரரான சமணரும் மக்கள் மயப்படாமல் ஊர்களுக்கு வெளியே தங்கியிருந்தனர். மொழிரீதியான புரிதலின்மையும் இருந்தது. பெண்களுக்கு எதிரான குரல்களும், சமணர்களின் அம்மணக் கோலமும் ஆண் துறவியரின் முதன்மையும் பெண்களிடத்தே பெரும் எதிர் வினையை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆதலாற்றான் எவ்வணிகர்

குலத்தவரால் இவர்கள் ஆதரிக்கப் பெற்றனரோ அக்குலத்தில் இருந்தே காரைக்கால் அம்மையார் எனும் பெண் வீறுடன் எழுந்து வந்து எதிர்வினையாக சைவக் குரலை முன்வைத்தார் எனலாம்.

இவ்வாறன சூழ்நிலையில், தேவார முதலிகள் மூவரும் காலதேச வர்த்தமானத்திற்கேற்ப சைவத்தை நிலைநாட்டப் பல்வேறு சவால்களை எதிர் நோக்கினர். அக்காலப் பகுதியில் இருந்த தமிழக சமயங்களை,

1. புறச் சமயங்கள்
2. அகச் சமயங்கள்/ உட் சமயங்கள்

என இவர்கள் எடுத்தாண்டனர். வேதாகமப் பாரம்பரியத்திற்கு மாறான சமண பௌத்தப் பிரிவுகளை புறச் சமயங்கள் என இவர்கள் கூறினர். அவர்களுடன் வாதங்கள் புரிந்தும் அவர்களுக்கு எதிராக அற்புதங்கள் நிகழ்த்தியும் அவர்களை ஒடுக்கிச் சைவத்தை நிலைநாட்டப் பெரும் முயற்சிகள் செய்தனர், வெற்றியும் கண்டனர். புறப்பகை வென்ற தேவார முதலிகள் அகப்பகையையும் வெல்ல வேண்டியிருந்தது. மூட நம்பிக்கைகள், நாகரிகமற்ற பிறரால் கேலிக்குட்படுத்தப்படும் செயல்கள், பலியிடல் முதலான கொடூர செயற்பாடுகள், சடங்குகள் என நிறைந்திருந்த, சமூகப் பெறுமானத்தைக் குறைக்கக் கூடிய செயற்பாடுகளில் சைவப் பிரிவுகள் பல ஈடுபட்டிருந்தன. அவை அகச் சமயங்கள் எனப்பட்டன.

தற்போது பாசுபதம், காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம்,பைரவம் முதலியன அகப்புறச் சமயங்களாக எடுத்தாளப்படுகின்றன. சிவஞான முனிவரின் ஊடாகவே இச்சொல்லாடல்ஆரம்பமாயிற்று[2]. அவருக்கு முற்பட்ட கால இலக்கியங்களில் இவை அகச் சமயங்கள், உட்சமயங்கள், அறுசமயங்கள் எனப்பலவாறு கூறப்பட்டன.

*"இமயங்களாய் நின்ற தேவர்கள் ஆறு*
*சமயங்கள் பெற்றனர்"* [3]
*எனத் திருமூலரும்,*
*"மெய்தரு சைவமாதி இருமூன்றாறும்"* [4]

*"புறச்சமயத்தார்க்கிருளாய் அகச்சமயத்தவர்க் கொளியாய்"*[5]
எனச் சித்தாந்த நூல்களும்கூறிப் போந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சைவத்தின் மேன்மையும் அதன் பரம்பொருளான சிவபெருமானே தன்னிகரில்லாக் கடவுள் என்பதையும் நிலைநிறுத்த வேண்டிய தேவை தேவார முதலிகளுக்கு இருந்தது. இதற்காக மொழி, சமத்துவம், தலயாத்திரை, தலப் பதிகங்கள், பிரதேச உணர்வு, அற்புதம், இல்லற முதன்மை எனப் பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். புறப்பகையைக் கண்ணுக்கெதிரே எதிர்த்து நிற்பவர்களை வெல்வதில் இவர்கள் பெரிதும் வெற்றி பெற்றனர். ஆனால், அகமுரண்பாடுடையதான சைவத்தின் பிரிவுகளும் அவற்றின் சம்பிரதாயங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், கோட்பாடுகள் என்பனவும் அவற்றிற்கு இடையிலான முரண்பாடுகளை நீக்கி ஒன்றிணைந்த சைவத்தை ஏற்படுத்தப் பெருஞ் சவால்களாக அமைந்திருந்தன. இதனால் பல்வேறு மாற்று நடவடிக்கைகளை தேவார முதலிகள் கைக்கொள்ள வேண்டியிருந்தது. அம்மாற்று நடவடிக்கைகளை மூன்றாகப் பகுத்து நோக்கலாம்.

1. சைவப் பிரிவுகளை அல்லது அவற்றின் நல்லம்சங்களை உள்வாங்கல்.
2. சைவப் பிரிவுகளின் ஒவ்வாத அம்சங்களை நிராகரித்தல் அல்லது அவற்றைப் பற்றி மௌனமாக இருத்தல்.
3. பிரிவுகள் பல எனினும், கடவுள் ஒருவரே, அவரே சிவபெருமான் எனல்.

இந்த வகையில் சைவப் பிரிவுகள், அக்காலத்தில் பெற்றிருந்த சமூக, சமய, தத்துவ, அரசியல் செல்வாக்கு மற்றும் தேவைகளைப் பொறுத்தே தேவாரங்களில் புலப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அறுவகைச் சமயங்கள் எனச் சுட்டப்படுபவை ஆதிசங்கரரால் பிரதிஸ்தாபகம் செய்யப்பட்ட சைவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், வைணவம் என்பவையோ எனின், ஆய்வாளர்கள் இல்லை என்பர்[6].

சங்கரரின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. சம்பந்தர், அப்பரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி. ஆக, சைவ நாயன்மாரால் சுட்டப்பட்டவை சைவப் பிரிவுகளே என்பது தெளிவாகின்றது. அந்த வகையில் இவ்வறுவகைச் சைவப் பிரிவுகள் நாயன்மார் காலத்திற்கும் முற்பட்டவை என்ற முடிவுக்கு வரலாம். வடமொழி வாமன, ஸ்கந்த, வாயு, கூர்ம புராணங்களும் மகாபாரதமும், இப்பிரிவுகளைப் பற்றிக் கூறுகின்றன[7]. வடநாட்டில் அதிக செல்வாக்குடன் திகழ்ந்த இப்பிரிவுகள் தமிழ் நாட்டிலும் ஓரளவு செல்வாக்குப் பெற்றன. இதனை மா. இராசமாணிக்கனார்,

"அப்பல பிரிவினர் பௌத்தரும் சமணரும் தெற்கே வந்த பொழுதோ அதற்கு முன்னரோ. பின்னரோ தென்னாடுபுக்கார்"[8]

என்கிறார். அத்தோடு காபாலிகர். காளாமுகர், பாசுபதர் எனும் பெயர் வழக்குகள் தமிழ்ப் பெயர்களாக இல்லை என்றும் கூறப்படுகின்றது.[9] ஆகவே இவை வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருக்க வேண்டும். தேவாரங்களுக்கு முந்திய நூலான சிலப்பதிகாரத்தில்,

*"சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்*
*பீடிகைப் பீலிப் பெருநோன்பாளர்*
*பாடு பாணியர் பல்லியத் தோளினர்*
*ஆடு கூத்தராகி எங்கணும்*
*ஏந்துவாள் ஒழியத் தாந்துறைபோகிய*
*விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர"* [10]

என வரும் வரிகளும், மணிமேகலையில்,

*"சுடலை நோன்பிகள் ஒடியா உள்ளமொடு*
*மடைதீ உறுக்கும் வன்னி மன்றமும்*
*விரதயாக்கையர் உடைதலை தொகுத்தாங்கு*
*இருந்தொடர்ப் படுக்கும் இரத்தி மன்றமும்"* [11]

எனும் வரிகளும் அகச் சமயங்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

தேவார முதலிகளும்,

*"ஆறு கூர்மையர்க்கு அச்சமயப் பொருள்*
*ஆறு போல் எம் அகத்துறை ஆதியே"* [12]
*"முன்னம் ஈர்மூன்று சமயங்கள் அவையாகிப்*
*பின்னை அருள் செய்த பிறையாளன் உறை கோயில்"* [13]

*"அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து*
*அவ்வவர்க்கு ஆங்கே ஆரருள் புரிந்து:"* [14]

எனக் கூறிப் போந்துள்ளனர். இவற்றினூடு சமண பௌத்த துறவிகளைப் போல (ஏறத்தாழ) அவர்களுக்குச் சமகாலத்தில் தமிழகத்திற்கு வருகை தந்தவர்களாக இச்சைவப் பிரிவினரைக் கருதலாம்.

ஒரு சமூகத்தின் பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தேவைகள் காலங்காலமாக மாறிமாறி வந்துள்ளன. அம்மாறுதல்கள் சமயம், மொழி, கல்வி, எனும் தளங்களினூடாகவே ஏற்பட்டு, சிந்தனை, பேச்சு, எழுத்து என்பவற்றினூடாக பரிமாற்றம் செய்யப்படுகின்றன. அக்காலச் சமூகத்தில் பொருளாதார அரசியற் செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த மதங்கள் வணிகரின் ஆதரவைப் பெற்று பெருவளர்ச்சி பெற்றிருந்தன. நிலக்கிழார்கள், நிலப் பண்ணைக்காரர்களின் ஒழுகலாறாக சைவம் இருந்தது[15]. வணிகருக்கும் வேளாளருக்கும் இடையிலான பொருளாதாரப் போர் பல்லவர் காலத்தில் நடைபெற்றது. இது முறையே சமண, சைவ போராட்டமாகவும் சமதளத்தில் இயங்கியது. கோயிற் பண்பாட்டின் வளர்ச்சி, வணிகரின் செல்வாக்கைக் குன்றச் செய்தது. வினைக்கு முதன்மை கொடுத்த சமணச் சிந்தனைக்கு எதிராக பக்தி முதன்மைப்படுத்தப்பட்டது.

*"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்*
*கங்கைவார் சடைக்கரந்தார்க்கன் பராகில்*
*அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே"* [16]

எனப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறைபக்தியால் வினை நீக்கம் நிகழும் என்பது புலப்படுத்தப்படுகின்றது. 'உயிர்ப்பலி'க்கு காபாலிக, காளாமுக, மாவிரத, பாசுபத, பைரவ மதங்கள் முதன்மையளிக்கின்றன. அவர்களை தேவார முதலிகள் வெறுத்து ஒதுக்கவில்லை.

*"ஆமயத்தீர்த் தடியேனை யாளாகக் கொண்டார்*
*அதிகை வீரட்டானம் ஆட்சி கொண்டார்*
*தாமரை போன் சிரமரிந்து கையிற் கொண்டார்*
*தலையதனிற் பலிகொண்டார் நிறைவாம் தன்மை*
*வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்*
*மானிடங் கொண்டார் வலங்கை மழுவாட்கொண்டார்*
*மாமனையுமுடல் கொண்டார் கண்ணால் நோக்கிக்*
*கண்ணப்பர் பணியுங் கொள் காபாலியாரே"* [17]

எனும் பாடல் இதற்குத் தக்கசான்றாகும். கொல்லாமை, புலாலுண்ணாமை என்பவற்றை முதன்மைப்படுத்திய சமண பௌத்தத்திற்கு மாறாக 'ஆவுரித்துத் தின்றுழலுபவரும் சிவனுக்கன்பராகில் தாம் வணங்கும் கடவுளராக' தேவார முதலிகளால் கூற முடிந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சைவப் பிரிவு பற்றி "காதலால் சைவர், பாசுபதர்கள் விளங்கும்"[18] எனவும்,

"விரிசடை விரதிகள் அந்தணர் சைவர். பாசுபதர், கபாலிகள் தெருவினிற் பொலிவுறும் திருவாரூர் அம்மானே"[19] எனவும் பாடியுள்ளனர்.

அகச் சமயங்களாகக் கூறப்படுவனவற்றுள் ஒன்றாகப் பாசுபதம் விளங்குகின்றது. மூவர் தமிழில்"பாசுபதர்கள்""பாசுபதன்"[20] என்ற சொற்கள் இடம்பெறுகின்றன.

மேலும்,

*"சைவர் பாசுபதர் வணங்கும் சண்பை நகரே"* [21]

எனும் வரியும் உதாரணமாகின்றது. அப்பர் சுவாமிகள் "பாசுபதம்" எனும் சொல்லை "பாசுபத அஸ்திரத்தை உடைய சிவன்" எனப் பொருள்படுமாறு எடுத்தாள்கின்றமையும் கவனத்திற்கு உரியதாகும்.

உதாரணமாக,

*"பாசுபதம் பார்த்தற்கு அளித்தார் போலும்"* [22]

எனும் வரியைச் சுட்டலாம்.

அதே வேளை,

*"சவந்தாங்கு மயானத்துச் சாம்பல் என்பு*
*தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்*
*பவந்தாங்கு பாசுபத வேடத்தானை"* [23]

எனும் வரிகளால் பாசுபத சைவத்தையும் குறிப்பிடுகிறார். இப்பாசுபதமே காபாலிக, காளாமுக, மாவிரத நெறிகளின் தாய் என டேவிட் லாரன்ஸ் கூறுகின்றார்[24].

காபாலிகம், காளாமுகம், மாவிரதம் பற்றிய தகவல்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. காபாலிகள் மண்டையோட்டு மாலை தரித்தவர்களாக கபாலம் ஃ மண்டையோடு தாங்கியபடி பிச்சையெடுப்பவர்களாகச் சுட்டப்படுகின்றனர். இத்தன்மைகளை உடையவராக சிவபெருமானை தேவார முதலிகள் எடுத்துரைத்துள்ளனர். சம்பந்தர், "கபாலம் ஏந்துங்கையர்" [25] எனப்பல இடங்களில் எடுத்தாள்வதும், நாவுக்கரசர், "குலா வெண்டலை மாலை என்பு பூண்டு"[26] "வெண்காடர்க்கு அங்கமாவது மாண்டவர் அங்கமே"[27] "விலையில் கபாலக்கலன்"[28]"சிரமாலை சூடி நின்று"[29] "மிக்க வெண்டலை விரிசடை"[30] எனப் பலவாறு எடுத்தாள்வதும் உதாரணங்களாகக் குறிப்பிடத்தக்கன.

காபாலிகத்தில் இருந்து கடும் விரதங்களால் மேம்பட்டவர்களாக கூறப்படும் மாவிரதிகள் என்பு மாலை தரித்தவர்களாகவே கூறப்படுகின்றனர். இவர்களைப் பற்றி,

*"இறந்தார்கள் என்பே அணிந்தான் தன்னை"*[31]

*"என்பாக எங்கு அணிந்தாய் போற்றி"*[32]

*"என்பாபரணம் அணிந்தார் தாமே"*[33]

*"என்பணிந்த அழகன்"*[34]

*"வித்தகக் கோல வெண்டலை விரதிகள்"*[35]
எனப் பலவாறு அப்பர் சுவாமிகளும்

*"மாவிரதத்தகங்களான்"*[36]
எனச் சுந்தரரும்

*"என்பு பூண்டோர் மேனி"*[37]
எனச் சம்பந்தரும்
எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோல காளாமுகம், வைரவம் போன்றவை பற்றியும் தேவாரங்களில் குறிப்புக்கள் உள்ளன. இதேவேளை மேற்சொன்ன பிரிவுகள் போல இவை தனித்துச் சொல்லப்படவில்லை. இறைவனுடைய அட்டவீரட்டச் செயல்களைப் பாடும் போது அதிலே பாசுபதம், மாவிரதம், காபாலிகம்,மட்டுமன்றி காளாமுகம்,பைரவம்,போன்றனவற்றினதும் சாயல்கள் தெளிவாகத் தெரிகின்றன. இவை சைவ சமய / சைவ சித்தாந்த தடத்த நிலைச் சிவனின் அருட்செயல்கள் எனக் கூறப்பட்டாலும் இச்சமயப் பிரிவுகளை அவற்றின் நல்லம்சங்களை, புராணங்களினூடாக நாயன்மார்கள் உள்வாங்கினர் என்றே கூறவேண்டும். உதாரணமாக காளாமுக சமயம் யானை உரிபோர்த்த வரலாற்றுடன் தொடர்புபட்டது. இவ்யானையுரி போர்த்த கதையை"மத்த மதக்கரியானை.... அன்று கையால் மெத்தவுரித்த.... விமலன்"[38]."கரியுரித்த கபாலி"[39]. "கரியுரித்தாடு கங்காளர்"[40] *"மதவாரண வதனம் பிடித்துரித்து"*[41]

என எடுத்தாள்வது நோக்கத்தக்கது. இதேபோல பைரவம் பிரமனின் தலை கொய்த வரலாற்றுடன் தொடர்புடையது என்பர்.

இதனை,

*"அன்றயன் சிரம் அரிந்ததில் பலி கொண்டு"* [42]

*"அயன் வெண்டலைந் துற்றலான கொள்கையானே"* [43]

*"வெண்டலையில் பலி கொண்டல்"* [44]

*"பிரமன் சிரமரிந்த ..... ஏறணி வெல்கொடியான்"* [45]

*"கண்மலரான் சிரமேந்திய விடையானை"* [46]

எனப் பலவாறு கூறுவதனை நோக்கலாம்.

அதேவேளை தக்கன் யாகம் அழித்தவராக புராணங்கள் கூறும் வீரபத்திரரின் பெயரையும் தேவார முதலிகள் கூறவில்லை என திருமதி. சந்திரலேகா வாமதேவா கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[47]

இவ்வட்டவீரட்ட தலப் பாடல்கள் ஊடாகவும் பிற இடங்களிலும் 'வாமம்' பற்றி நேரே கூறாது விடினும் அக்கினியும் உபவீதமும் தாங்கிய வாம கோலத்தை தேவாரங்களில் நாம் காணலாம்.

*"கன லேந்து கையான்"* [48]

*"கறைமலி திரிசிகை"* [49]

எனவும் பாடிய வரிகளைக் குறிப்பிடலாம்.

ஆனையுரி போர்த்த வரலாற்றில் உமையோடு சிவன் இருந்தான் எனப்படுகிறது. பெண்ணுடன் இருத்தலே, கலத்தலே இலட்சியம் எனும் சிந்தனை காபாலிகத்தில் வரலாற்றுப் போக்கில் ஏற்பட்டதாக Dr.தகாரே குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது[50]. இதனை அடிநிலையாகக் கொண்டு நோக்கும் போது,

*"ஏலவார் குழலாளோடு பாகமிடங் கொடு*
*கோலமாகி நின்றான்"* [51]

*"உமையாளொடு இன்புறுகின்ற ஆலவாய்"* [52]

முதலான சொற்களால் சம்பந்தரும் 'மாதொரு பாகன்' முதலான சொற்களால் அப்பரும் கூறிப் போந்தமை 'காபாலிகச் சிந்தனையையே' எனக் கொள்ளலாம். தவிர, அட்டவீரட்டச் செயல்களைப் பற்றிய பாடல்களில் திருவெண்ணீற்றுக் கோலத்திற்கு முதன்மை கொடுத்துள்ளனர். பண்டிதர் மு.கந்தையா திருவெண்ணீற்றுக் கோலமே 'பாசுபதம்' என்கிறார்[53].

இதற்கு,

*"நீறு மெய்பூசவல்லானும்"* [54]
*"நீறேறு திருமேனி உடையான்"* [55]
*"நீறிட்ட நுதலர்"* [56]
*"எல்லா இடமும் வெண்ணீறணிந்து"* [57]

எனும் வரிகளை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

என்பு மாலை அணிந்த சிவபெருமானின் அணுக்கத் தொண்டரான சம்பந்தர் என்பிலிருந்து பூம்பாவையை தோற்றுவித்து அற்புதம் நிகழ்த்தியமை இங்கு மனங் கொள்ளத்தக்கது.

மேலும், இச்சைவப் பிரிவினர் பெரும்பாலும் என்பு மாலை, உடல் முழுவதும் சாம்பற் பூச்சு, கையிற் கபாலம் எனச் சுடலையாண்டிகளாகவே காட்சி தந்துள்ளனர். இவர்கள் அக்காலப் பகுதியில் வாழ்ந்த சுடலைகள் பிற்காலத்தில் சுடுகாட்டுத் தலங்களாகிப் பின்பு சிவஸ்தலங்களாக ஆகமச் சிவாலயங்களாக உருமாற்றம் பெற்றுள்ளன. கச்சி மயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம், என்பன தேவாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. காளாமுகர் வாழ்ந்த இடங்கள் 'மாகாளம்' எனப்பட்டன. அம்பர் மாகாளம், உஞ்சேனை மாகாளம் போன்றன சிவஸ்தலங்களாக தேவாரங்களில் சுட்டப்படுகின்றன[58].

இந்தச் சமயங்கள் யாவும் பலியிடலைக் குறிப்பிட்டுள்ளன. "புறப்பை படுத்தெங்கும் பசுவேட்டு எரிஓம்பும்"[59] எனும் பாடல் பெரும் அதிர்ச்சியைத் தருகின்றது. வேள்வியில் பசுக்களை – உயிர்களை அவிப்பலி கொடுத்து அனல் வளர்க்கும் சிறப்புடையவர் பாசுபதர் என்கின்றது. 'நரபலி' உள்ளிட்ட பலிகள் இருந்தமையையும் அவற்றை சிறப்பித்துப் பாடிய சூழலையும்

இங்கு அவதானிக்க முடிகிறது. பசு எனும் சொல் உயிர்களை அல்லது கோமாதாவைக் குறிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பலியிடல் அக்காலச் சமூகத்தின் நம்பிக்கையாக வாழ்வியலாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் சம்பந்தர், இறைவன் பலி ஏற்பது, உண்பது, பலிக்கலன் என்பன பற்றிப் பாடியுள்ளார்[60]. மேலும் பைரவ மதத்தவரின் தூண்டுதலால் பிள்ளைக்கறி சமைத்த சிறுதொண்டரை அப்பர் புகழ்ந்து பாடியுமுள்ளார். மேலும் அவர்'மலர்வளர் இறையவன் வழி வழுவிய சிரமது கொடு பலி திரிதரு சிவன்[61] எனப் பாடியுள்ளமை தலைவெட்டிப் பலி கொடுக்கும் மரபை ஏற்று நிற்கிறது. இப்பலியிடலும் முற்சொன்ன அட்டவீரட்டச்செயல்களும் பகையழிப்புகள் சார்ந்த எடுகோள்களாகவும், முயற்சிகளாகவும் கொள்ளப்பட்டன என்கிறார் தொ.பரமசிவன்[62]. இதனை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். தமிழ் நாட்டில் பல்லவரின் தொடக்க காலக் கற்றளி ஆலயமான காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலேயே பிரம்ம சிரச்சேத மூர்த்தி சிற்பம் காணப்படுகிறது.[63] பிச்சாடனமூர்த்தி கோலம், பிரமன் தலை கிள்ளிய கதை போன்றவை உள்ளிட்ட தேவார முதலிகளின் எடுகோள்கள் புறச் சமயவாதிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைக் குரல்களாக இருக்கலாம். நிர்வாணத்தை முதன்மைப்படுத்தும் சமணத்திற்கு எதிராக தேவார முதலிகள் சிவனின் மூன்று கோலங்களை முன்னிறுத்தினர்.

1. ஆயுதம், கபாலம் என்பு மாலை, ஏந்திய நிர்வாணக் கோலம்.
2. கீழாடை அணிந்த கோலம்.
3. ஆனந்தக் கோலங்களும் பெண்ணுடன் இணைந்த வடிவங்களும்.

நிர்வாணம் என்பது சமணத்தின் முக்கிய விடயங்களில் ஒன்று. முள்ளை முள்ளால் எடுப்பது போல சைவரும் நிர்வாணத்தை முன் வைக்கின்றனர். தாந்திரிக வழிபாட்டாளர்களான இவ்வகச் சமயிகள் நிர்வாணத்தை முதன்மைப்படுத்துகின்றனர். அத்தோடு அதனை அசாதாரண வடிவமாகக் காட்டுகின்றனர். நெற்றிக் கண், விரிந்ததும் தாழ்ந்ததுமான சடை, கோரப் பற்கள், கோரமுகம், கரிய நிறம், கையிற் சூலம், உடல் முழுவதும் சாம்பற் பூச்சுடன் கூடிய நிர்வாணக் கோலம் கொண்ட 'பைரவர்' முன்னிறுத்தப்படுகிறார். காண்போருக்குத் திகிலூட்டும் இத்தோற்றம் ஆயுதமற்ற வெறும் நிர்வாணியான சமணரை விரட்ட உதவிற்று.

அடுத்த கட்டமாக கீழாடை அல்லது மேலாடை, அணிந்த தெய்வம் முதன்மை பெறுகிறது.

*"யானைத் தோலாடை.*[64]
*"அரைகெழு கோவண ஆடை"* [65]

பூண்ட இத்தெய்வம் மக்களுடன் ஊடாடும் நிலையைப் பெறுகின்றது. இந்நிலையுடன் யானையுரி, புலித்தோலுரித்த புராணக் கதைகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. அடுத்த நிலை குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, பனித்த சடை, இனித்தமுடன் எடுத்த பொற்பாதமென்ற ஆனந்த நிலை கூறி ஆணும் பெண்ணும் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்கின்றனர். சமண, பௌத்த துறவினுள் மூழ்கியிருந்த தமிழ்ச் சமூகத்தை மேற்சொன்ன மூன்று படிநிலைச் செயற்பாட்டினூடாக மீட்ட தேவார முதலிகள் தமிழகத்தில் சைவ நெறியையும், சைவர்களையும் இவ்வாறாக ஆற்றுப்படுத்தினர்.

இந்த வகையில் பல்வேறு சைவப் பிரிவுகளை நேரே சுட்டியும் சுட்டாமலும் கூறியதோடு அவற்றின் நல்லம்சங்களை எடுத்துரைத்து, அவற்றைத் தம்முள் உள்வாங்கிய தன்மையும் புலனாகிறது. தவிர, சிவபெருமானே யாவர்க்கும் கடவுள் எனும் ஏக தத்துவச் சிந்தனையை நிலை நிறுத்த முற்பட்டனர். உட்சமயங்கள் ஆறு எனினும் சிவனே பதி என்றனர்.

*"ஆறுசமயங்களுக் கொரு தலைவன்"* [66]
*"ஆறுசமயம் ஓதியும் உணர்ந்தும்*
*உளதேவர் தொழ நின்றருள் செய் ஒருவன்"* [67]
எனச் சம்பந்தரும்,

*"அறுவகைச் சமயம் வைத்தார்"* [68]
*"சமயமவை ஆறினுக்கும் தலைவன் தான் காண்"* [69]
என அப்பரும், பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆக, அகச் சமயங்களின் மூடநம்பிக்கைகள் தவறான செயல்களை மௌனமொழியில் நிராகரித்தும் அவற்றின் கொடூரமான பலியிடல்,

தண்டனை, முதலானவற்றைப் பயன்படுத்தி புறச் சமயங்களை எச்சரித்தும், பக்தி- வன்பக்தி என்பனவற்றை முக்திக்குரிய மார்க்கமாக்கியும் சாம்பல் - நீறு, வெண்டலைமாலை - உருத்திராக்கம், இரத்தத்திலகம் - குங்குமம், காபாலிகன்,காபாலினி தொடர்பு - அர்த்த நாரீஸ்வரர் என நவீன மயப்படுத்தியும் சைவப் பிரிவுகளை ஒன்றாக்கி ஆகம மயப்பட்ட சைவமாக்கினர். இவ்வாறான செயற்பாட்டையே பின்பு ஆறுமுக நாவலரும் பின்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. மூவர் பாடல்கள்'புறச் சமயத்தவர்க்கு இருளாய் அகச் சமயத்தவர்க்கு ஒளியாய் திகழ்ந்து ஒன்றிணைந்த வைதீக சைவத்தை உருவாக்கம் செய்து நிலை நிறுத்தின' என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

## அடிக்குறிப்புகள்

1 பரமசிவன்.தொ. - 2005 - *சமயங்களின் அரசியல்*, கங்கு வெளியீடு. சென்னை. ப - 3

2 சிவஞானயோகிகள் (உரை) 1986, *சிவஞானபோதம்*, உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை. பக்.38,39

3 திருமந்திரம் - 1550

4 சித்தியார் சுப - பா 163

5 சிவப்பிரகாசம் பா - 7

6 கந்தசாமி.சோ.நா - 2003, *இந்திய தத்துவக் களஞ்சியம்*, தொகுதி 3, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை. ப- 30

7 கந்தையா.மு - 1998, *சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி*. ஸ்மிருதி, யாழ் பல்கலைக்கழகம் - பக் 112.

8 *பல்லவர் வரலாறு* - பக் 271

9 மேலது

10 *சிலப்பதிகாரம்* - 22 : 26 - 27

11 *மணிமேகலை* - 6 : 86 - 89

12 *அப்பர்* - 5 :89.6

13 *சம்பந்தர்* - 1 : 29.5

14 *சுந்தரர்* - 7.55.9

15 கைலாசபதி.க.- ப - 87- 1999

16 அப்பர் பொது.தனித்திருத்தாண்டகம் - பா 10 - ப 527

17 மேலது

18 சம்பந்தர் - 1:6.4

19 அப்பர் - 6:20.3

20 சம்பந்தர் - 66.4

21 சம்பந்தர் - 1.66.4

22 அப்பர் - 6:28:2

23 அப்பர் - 6: 50.2

24 Lorenzen - David N – 1972 – THE Kāpālikas And Kālāmukhas, Motial Bamar sidass Publishers Pvt Ltd.Delhi. P.9

25 சம்பந்தர் - 201- 1, 192 - 9, 71 - 1, 310 - 4, 203 - 3

26 அப்பர் - 215.8

27 அப்பர் - 162.10

28 அப்பர் - 2.7

29 அப்பர் - 111.11,226.5

30 அப்பர் - 168.4

31 அப்பர் - 282.7

32 அப்பர் - 269.2

33 அப்பர் - 249.4

34 அப்பர் - 287.7

35 அப்பர் - 6:21:1

36 சுந்தரர் - 7:67:10

37 சம்பந்தர் - 187.4

38 சம்பந்தர் - 106.2

39 சம்பந்தர் - 176.1

40 சம்பந்தர் - 351.6

41 சம்பந்தர் - 10.8

42 சுந்தரர் - திருக்கோலக்காத் திருப்பதிகம் - பா - 7

43 சம்பந்தர் - 211.3

44 சம்பந்தர் - 42.10

45 அப்பர் - 105.4

46 அப்பர் - 149.4

47 சந்திரலேகா வாமதேவா-1981 திருஞானசம்பந்தர் தேவாரம் காட்டும் சமயமும் தத்துவமும்,(அச்சிடப்படாதது) முதுகலைமாணி ஆய்வு, யாழ் பல்கலைக் கழகம்,

48 சம்பந்தர் 158.3

49 சம்பந்தர் 22.6

50 தகாரே.க.வை.டாக்டர் - சைவ தத்ததுவம் - அலயன்ஸ் வெளியீடு - ப - 387

51 சம்பந்தர் - 146.9

52 சம்பந்தர் - 378.7

53 கந்தையா.மு.பண்டிதர் - மேலது - பக் - 114

54 அப்பர் - 4 : 52.3

55 அப்பர் - 6: 29.1

56 அப்பர் - திருநேரிசை - பா - 7

57 சம்பந்தரின் நீற்றுப் பதிகம் - 199.3

58 அரிவையோடிருப்பிடம் அம்பர் மாகாளந் தானே - சம்பந்தர் - 351

59 சம்பந்தர் - 1:80- 1, இராசமாணிக்கனார்.மு.கு.நூ - பக் - 112

60 சம்பந்தர் - 194 - 2, 51 - 7, 381- 9,143 - 6, 243 - 3

61 20.8

62 பரமசிவன்.தொ.மேலது - ப - 9

63 மேலது - ப - 10

64 அப்பர் - 180.2

65 அப்பர் - 40.2

66 சம்பந்தர் - 131.1

67 சம்பந்தர் - 329.5

68 அப்பர் - 33.2

69 அப்பர் - 278.5